முதலையிடம் தப்பித்த குட்டி பையன்

ஒரு பிலிபைன்ஸ் நாட்டின் நாட்டுப்புற கதை

முதலையிடம் தப்பித்த குட்டி பையன்

ஒரு பிலிபைன்ஸ் நாட்டின் நாட்டுப்புற கதை

முதலையிடம் தப்பித்த குட்டி பையன்

ஒரு பிலிபைன்ஸ் நாட்டின் நாட்டுப்புற கதை

எழுத்தாளர்- ஜோஸ் அறியான் அருகோ

தமிழில் கிருஷ்ணன்



ஒரு நாள் ஆத்தங்கரையில் ஜுவான்
நடந்து கொண்டிருக்கும் போது
யாரோ அழுவது போல் ஒரு
சத்தத்தை கேட்டான்.

சுற்றி முற்றி பார்த்த போது ஒரு முதலை மரத்தில் கயிறால் கட்டப்பட்டு தொங்கி கொண்டிருந்தது.

“நான் எப்படி உனக்கு உதவ முடியும்” என்று கேட்டான் ஜுவான்.

“நீ என்னை இந்த கயிறிலிருந்து விடுவித்தால் உனக்கு ஒரு தங்க மோதிரம் தருகிறேன்” என்றது முதலை.

ஜுவான் கயிறை கழட்டிவிட்டான். “எங்கே அந்த தங்க மோதிரம்?” என்றான்.

“மோதிரமா! அது..அது.. என்னிடம் இப்போது இல்லை. என் முதுகின் மேல் ஏறி கொள். நாம் இருவரும் அதை எடுத்து வரலாம்” என்றது முதலை.

ஆற்றின் நடுவிற்கு வந்தவுடனேயே ஜுவானை பார்த்து முதலை சொன்னது "என்னிடம் தங்க மோதிரம் ஒன்னும் இல்லை. ஆனால் உன்னை நான் சாப்பிட போகிறேன்!"

“இது அழுகினியாட்டம்” என்று சொல்லி அழுதான் ஜுவான்
“உன் உயிரை காப்பாற்றியதற்கு இது தான் எனக்கு பலனா” என்றான் ஜுவான்
முதலையோ “ எத்தனை பேருக்கு முதலையால் சாப்பிடுகிற பாக்கியம் கிடைக்கும்” என்று சொல்லி சிரித்தது.

அந்த நேரம் ஒரு கூடை ஒன்று மிதந்து கொண்டு வந்தது.
தயவு செஞ்சு “அந்த கூடையிடம் நீ என்னை
சாப்பிடலாமா என்று கேளேன்” என்று கெஞ்சினான்
முதலையிடம் ஜுவான்.
“உன் விருப்பம்” என்று திமிராக கூறியது முதலை .

“கூடயே.. கூடையே..” என்று அழைத்தான் ஜுவான். எங்களுக்கு இடையே ஒரு பிரச்சினையை நீ தான் தீர்த்து வைக்கணும். “மரத்தில் ஒரு கயிறில் கட்டப்பட்டு கிடந்த இந்த முதலையை நான் கயிறை கழற்றி காப்பாற்றினேன். அப்படி காப்பாற்றினால் ஒரு தங்க மோதிரம் எனக்கு தருவதாக முதலை சத்தியம் செய்தது. ஆனால் காப்பாற்றியவுடன் என்னிடம் தங்க மோதிரம் இல்லை என்றும் உன்னை நான் சாப்பிட போகிறேன்” என்றும் கூறுகிறது. “இது தான் நன்றி கடனா?.”

“நான் புதிதாக இருக்கும் போது என்னுடைய எஜமானனுக்கு அரிசி கொண்டு செல்ல உதவினேன், அவருடைய மனைவிக்கு பழங்கள் எடுத்து செல்ல உதவினேன். அவருடைய மகனும் என்னை வைத்து விளையாடி மகிழ்ந்தான்.

ஆனால் நான் பழசு ஆன பின் என்னை தூக்கி எரிந்து விட்டார்கள்” என்றது கூடை.

“மனிதர்களுக்கு நன்றி உணர்வே கிடையாது, அதனால் நீ
தாராளமாக இந்த பையனை சாப்பிடு” என்றது கூடை .
“நன்றி” எனறது முதலை “கண்டிப்பாக நான் சாப்பிடத் தான்
போகிறேன்” என்றது.

“அட கடவுளே” என்றான் ஜுவான். அதே நேரம் ஒரு தொப்பி மிதந்து கொண்டு வந்தது, ஜுவான் அதை அழைத்தான்.

“என்ன சங்கதி” என்றது அந்த தொப்பி
“இந்த முதலை கயிறால் கட்டடப்பட்டிருந்தது. நான் அதை அவிழ்த்து காப்பாற்றினேன் முதலையை ஆபத்திலிருந்து காப்பற்றினேன் இப்போது என்னை சாப்பிட போகிறேன் என்கிறது இது நியாயமா?” என்றான் ஜுவான்.

“நான் புதுசா இருக்கும் போது என்னுடைய முதலாளி நகரத்திற்கு போகும் போது சோக்கா என்னை போட்டுக்கிட்டு போவார். வெய்யிலிலிருந்து நான் அவருக்கு நிழல் தந்தேன். வயலில் வேலை செய்யும் போது மழையில் நினையாமல் பார்த்து கொண்டேன். ஆனால் நான் பழையது ஆனதும் அவர் என்னை நதியில் தூக்கி எரிந்து விட்டார்.” என்றது தொப்பி.

“மனிதனுக்கு நன்றி உணர்வு இல்லவே இல்லை. நீ மட்டும் எதற்கு நன்றியோடு இருக்கணும். இந்த பையனை தின்று விடு” என்றது தொப்பி

“கேட்டியா தம்பி ?” என்று ஜுவானை முழுங்குவதற்கு வாயை பொளந்தது முதலை.

“இரு இரு !” என்று கதறினான் ஜுவான்
“சரி அந்த வாழை மரத்தில் இருக்கும் குரங்கிடம் கேப்போம்”
என்றான் ஜுவான்
“சரி சரி, சீக்கிரம் கேள். இது தான் உனக்கு கிடைசி முறை” என்று
கடுப்புடன் கூறியது முதலை

“குரங்கே குரங்கே” என்று உரக்க கத்தினான் ஜுவான்.
“இந்த முதலை என்ன திங்க போகிறது”.
“எனக்கு கேட்க வில்லை” என்றது குரங்கு.
“ கொஞ்சம் கூட கிட்ட வாயேண்டா தம்பி” என்றது குரங்கு.

முதலை ஆத்தங்கரை நோக்கி சென்றது
“இந்த முதலை கயிறில் மாட்டியிருந்தது” என்றான் ஜுவான்
“எனக்கு இன்னும் கேட்கவில்லை. இன்னும் கொஞ்சம் கிட்ட வாடா தம்பி” என்றது குரங்கு
முதலை கட்டுப்பில் “இந்த பையனை எனக்கு திங்கணும்” என்று புலம்பி கொண்டே கரைக்கு சென்றது.

அந்த கன நொடியில் ஜுவான் கரையில் தாவி குதித்து விட்டான்.
“மிக்க நன்றி” என்றான் ஜுவான் குரங்கிடம்
“நீ என் உயிரை காப்பாற்றிவிட்டாய். நான் உயிரோடு இருக்கும் வரை நான் மறக்கவே மாட்டேன்.”

“அப்போ எனக்கு நீ ஒரு உதவி செய்யணும்டா தம்பி” என்றது குரங்கு

“நீ உன் அப்பாவிடம் சொல்லி நிறைய வாழை மரங்களை நட்டு வைக்க சொல்லு. அப்போ நம்ம எல்லோருக்கும் நிறைய வாழை பழங்கள் கிடைக்கும்.

பிறகு என்னை நீ இந்த மரத்தில் பார்த்தால் உன் அப்பாவிடமோ இல்லை யாரிடமும் காட்டி கொடுக்க கூடாது.”



“சரி, நிச்சயமாக”

என்றான் ஜுவான்



முடிவு